# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-10

பிப்ரவரி 2015

பருவம் 1 புனல் 5



# இராஜராஜன் சோழன் தமிழனே அல்ல !

வரலாற்றுச் சான்று

# ஜாதிகடந்து
# மதம் கடந்து
# இனம் கடந்தும்
# காதலிப்போம்!
# காதலர் நாளைக் கொண்டாடுவோம்!

பழந்தமிழர்களின் பண்பாடானது,உடன்போக்கு, முன்வரைவு,களவு போன்றஇயல்பான மணமுறைகளுக்கு-காதல் உணர்வுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதாக இருந்தது.

ஒரு பெண்ணும் ஆணும் ஒருவருக்கொருவர் காதல் கொண்டு - தம் துணையைத் தானே தேர்வு செய்து கொண்டு - சடங்கு, சம்பிரதாயங்கள் எதுவும் இன்றி இயல்பாக இணைந்து வாழ்ந்து வந்தனர்.

ஆனால்ஆரியர்களின்படையெடுப்புக்குப் பிறகு இயல்பான மணமுறைகள் அழிந்து விட்டது. மனு சாஸ்திரம் சொல்லியுள்ள 'ப்ராஹ்மம்'என்ற ஆரியர் மணமுறை தமிழர்களின் மணமுறையாகிவிட்டது.

'ப்ராஹ்மம்' என்றால் என்ன? ஒழுக்கமும், கல்வியும், நற்குடிப்பிறப்பும், இளமையும்,அழகும் உடைய வரனைத் தேர்ந்தெடுத்து பெரியவர்களால் நிச்சயிக்கப் பெற்று மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சிறந்த முறையில் அலங்காரங்களைச் செய்து வேதவிதிப்படி 'கன்யாதானம்' செய்வதை 'ப்ராஹ்மம்' என்று மனுஸ்மிருதி கூறுகின்றது.

இந்த ப்ராஹ்ம முறையைத் தான் நமது திருமண முறையாகத் தவறாக நாம் பின்பற்றி வருகிறோம். தமிழர்களுக்கு எதிரான ப்ராஹ்ம முறையை நமது காலத்திலாவது ஒழித்திடுவோம்!

ஆண் - பெண்ணின் திருமண வயது 21, அல்லது 31, அல்லது 41 எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் ஆணோ, பெண்ணோ நமது வாழ்க்கைத் துணையை நாமே தேர்ந்தெடுப்போம்.

ஜாதிகடந்து, மதம் கடந்து -
இனம் கடந்தும் காதலிப்போம்.
காதலர் நாளைக் கொண்டாடுவோம்!
பழந்தமிழ ர் பண்பாட்டைப் புதுப்பிப்போம்!!
திராவிடர் பண்பாட்டைச் செயல்படுத்துவோம்!!!

என் பிரியப் பூவே

அடீ
ஏழுமலைகளைத் தாண்டி
ஒரு பூவைப் பறித்துவரும்
கிராமியக் கதைகளை

இளமை நாட்களின்
நிலா இரவுகளில்
நீர் தெளித்த முற்றத்து
ஈச்சம் பாயில்
கேட்டபடியே
இமை மூடியவன்

இன்று
அம்மாவைத் தாண்டி
அப்பாவைத் தாண்டி
அக்காள் மகளைத்தாண்டி
சாதியைத் தாண்டி
பணத்தைத் தாண்டி
சோதிடரைத் தாண்டி
மலரே
உன்னைப் பறிக்கத் துடிக்கையில்

தூக்கத்தைத்
தொலைத்து விட்ட
இமைகள்
துடித்துத் துடித்து
அதைத்
தேடுகின்றனவே



அடீ
நீங்கள்
இணைந்துதான்
தீர்வீர்களென்றால்
நாங்கள்
செத்தே தீருவோம்
என்று நம்
பெற்றோர்கள் கூறுவதற்காய்
நீ
அனுதாபப் பட்டாய்

சாகப்போகிற
அவர்களுக்கே
அவ்வளவு
பிடிவாதம் இருப்பதென்றால்

வாழப்போகிற
நமக்கு
எவ்வளவு
பிடிவாதம் இருக்க வேண்டும்?

பெற்றோர்களுக்காகக்
காதலைச்
சாகடிப்பதைக் காட்டிலும்
காதலுக்காகப்
பெற்றோரைச் சாகவிடுவது
பாவமில்லை!

அது
பாவமென்றாலும்
தாஜ்மகாலை உரசி ஓடும்
யமுனையைக்
காதற் கங்கையாக்கி
அதில் அதைக்
கரைத்துவிடுவோம்!

நன்றி: பாவலர் அறிவுமதி



சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

# காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

தொகுப்புக்குழு
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

சட்ட ஆலோசனைக்குழு
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

விளம்பரத் தொடர்பு
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

விற்பனைத் தொடர்பு
ஆ. பாண்டியன் 96591 12891
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

சந்தா தொடர்பு
அ. கிருட்டிணகுமார்
97882 97428

வடிவமைப்பு
Mukizh Media

அச்சு
செல்வக்குமார்
BS Graphics, Chennai

அலுவலக நிர்வாகம்
சி. இராவணன் 97868 89325

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல். 624003
kaattaaru2014@gmail.com

வெளியீடு:
சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்




## மனுநீதி, கம்பராமாயணம், பெரியபுராணங்களைக் கொளுத்துவோம்!
-அறிஞர் அண்ணா

கம்ப ராமாயணம் பெரிய புராணம், மனுநீதி முதலிய புத்தகங்களைச் சுயமரியாதைக்காரர்கள் தீ வைக்கப் போவதை குறித்து, இந்து பத்திரிகை 17.01.43-ல் ஓர் உபதலையங்கத்தில் ஓர் ஒப்பாரி வைத்து அழுதிருக்கிறது.

இவ்விதம் சுயமரியாதைக்காரர்கள் செய்கையைக் கண்டிக்க இந்துப் பத்திரிகைக்கு யோக்கியதையுண்டா?

காங்கிரஸ்காரர்கள் பரதேசித் துணியை மூட்டை மூட்டையாய்க் கழுதைபோல் சுமந்து போய்த் தீ வைத்துக் கொளுத்தினபோது, இந்து பேப்பரின் புத்தி புல் மேயப் போயிருந்ததோ? துணிகளை மட்டும் கொளுத்தலாமா? அது அறிவுடையவர்கள் செய்கைதானா? தனக்கு வேண்டாதவைகளைக் கொளுத்தினால் அது குற்றமாகாதென்பது இந்துவின் கருத்தா?

உனக்கு வேண்டாதவைகளைக் கொளுத்த உனக்குச் சுதந்திரமிருக்கும்போது, எனக்கு வேண்டாதவைகளை நான் கொளுத்தினால் நீ என்ன கேட்பது, பாலம் கட்டினால் இரு கரைக்கும்தானே? உனக்கொரு வழக்கு மற்றவர்களுக்கு ஓர் வழக்கா? இதற்குச் சர்க்கார் உதவி தேடுவது வேறா? நிற்க! சுயமரியாதைக்காரர்கள் கம்பராமாயணத்தையும், பெரியபுராணத்தையும், தமிழ் அபிமானம் கருதித் தீக்கிரையாக்குவதினின்றும் விலக்கிவிட்டு மனுஸ்மிருதியை மட்டும் எரியவிடுவார்களா; அதைத் தீக்கிரையாக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம். அதற்காக ஜெயிலுக்குப் போகவேண்டியது நேரிட்டால் ஜெயிலுக்குப் போகும் போதும் பின் விடுதலையாய் வந்த உடனும் இந்தப் புண்ணிய கைங்கரியத்தைத் தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொருவனும் செய்யவேண்டியதே.

நாய், கழுதை, பன்றி முதலியவைகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பேசும் புத்தகத்தை எது செய்தால் என்ன? தமிழர்களே சுயமரியாதை எந்தக் காரியமானாலும அதன் விஷய உண்மைகளை ஆராய்ந்து அலசிப்பார்த்து காங்கிரஸ் பத்திரிகைக் கூற்றுகளில் மயங்கி உங்கள் சித்தத்தைச் சிதறவிடாதீர்கள்.

மனுஸ்மிருதியில் தமிழ் மக்களை நாய், கழுதை, பன்றி முதலியவைகளுக்கு ஒப்பிட்டுப் பேசியிருப்பதால் அதனைக் கொளுத்த வேண்டும்.

கம்பராமாயணத்தில், தமிழ் மக்களைக் குரங்குகள் என்றும் தமிழ் மன்னனான இராவணனை அரக்கனென்றும் அயோத்தி அரசனான இராமனைக் கடவுள் என்றும் பேசப்பட்டிருக்கிறதே! இதைக் கொளுத்துவதில் என்ன தவறு?

பெரியபுராணத்தில், தமிழ் மக்களைச் சற்சூத்திரர் அதாவது நல்ல அடிமைகள் என்றும், ஒழுக்கங் கெட்டவர்கள் என்றும், கொலைக்கஞ்சாக் கொடியவர்கள் என்றும், முட்டாள்கள் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறதே! இதைக் கொளுத்துவதில் என்ன தவறு? மொழிப்பற்று ஒன்றை மட்டும் கருதினால் போதுமா? தமிழ் மக்களை முட்டாளாக்கியும் மிருகத்தன்மை கற்பித்தும் உள்ள இத்தகைய நூல்களைக் கொளுத்தாது விடுவது உண்மையான மொழிப்பற்றாகுமா?

ஒரு மொழியினிடத்துப் பற்றுவைப்பது வேறு; அந்த மொழி கற்பிக்கும் அறிவுக் கொவ்வாக் கருத்துக்களை ஆதரிப்பது வேறு, தாயைப் போற்றுவதும் தாயை விலைமகளாக்குவதும் ஒன்றுதானா?

இயற்கை அமைப்பும், இனிமையும், சொற்சுவை பொருட்சுவையும் வாய்ந்துள்ள நமது அருமைத் தமிழ்மொழியின் கண், வந்து கலந்துள்ள ஆரிய மொழியையும் அது கற்பிக்கும் அறிவிக்கும் இயற்கைக்கும் பொருந்தாக் கதைகளையும் நுழைத்துத்தானோ தமிழ்ப்பற்றை உணர்த்துவது?

தம் மனைவியை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுத்தால்தான், அந்த சிவனாரின் திருவருள் கிடைக்கும் என்று கூறும் ஒரு புராணத்தை இன்னும் கொளுத்தாமல் இருப்பது தமிழ் மக்களின் தவறென்பதே பகுத்தறிவாளரின் கருத்தாகும்.

சென்னை நக்கீரர் கழக எழுத்தாளர் ஒருவர், மனுதர்ம நூல் இறந்து விட்டதென்றும், ஆங்கிலேயர்களே மனு தர்ம நூலைத் தள்ளிவிட்டார்கள் என்றும்; கம்பராமாயணத்தை மதக்கண் கொண்டு பார்க்காமல் அறிவுக்கண் கொண்டு பார்க்க முடியும், பெரியபுராணத்தைச் சரித்திரக்கண் கொண்டு பார்க்கும் படியும் எழுதுகிறார்.

சமூக சம்பந்தமான வழக்குகள் முறை மன்றங்களில் நடக்கும்போதெல்லாம் நீதி வழங்குவோர், மனுதர்ம நூலையும் பராசஸ்மிருதி நூலையுமே மேற்கோள் காட்டி வழக்குகளை முடிவு செய்து வருவதை இந்நண்பர் அறியாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே.

மைசூர் திருவாங்கூர் முதலான ஊர்களில் இருக்கும் குறுநில மன்னரைப்போன்ற ஒரு அயோத்தி அரசனைக் கடவுளாக்குவதற்காகப் பாடப்பெற்ற கம்பராமாயணத்தை மதக்கண் கொண்டு பார்க்காமல் அறிவுக்கண் கொண்டு பார்த்தாலும், இராமனைக் கடவுளாக வணங்கு என்ற மத முடிவைத்தான் அது கற்பிக்கிறது. எனவே மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் துணை செய்யாத இதில் அறிவுக் கண்ணுக்கு வேலை எங்குளது?

இனிப் பெரியபுராணத்தைத் சரித்திரக் கண்கொண்டு பார்க்கும்படி எழுதும் இந்நண்பர்க்குச் சரித்திரமே தெரியாதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அதாவது, ஒரு காலத்திலே தமிழ்நாட்டில் 63 முட்டாள்கள் இருந்தார்கள். அவர்களின் சரித்திரத்தைக் கூறுவதுதான் பெரியபுராணம் என்று சொன்னால் அதை நாம் வரவேற்கிறோம். மற்றும் பெரிய புராணத்தில், மக்களின் அறிவைப் பாழாக்கும் முட்டாள்தனமான கதைகளைத் தவிர, வேறு சரித்திர சம்பந்தமான உண்மை நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை என்பதைப் பகுத்தறிவுக்கண் கொண்டு பார்க்கும்படி, நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்ற கூறிய நக்கீரன் பெயரால் கழகம் நிறுவி, அதன் எழுத்தாளனாக இருக்கும் நண்பரைக் கேட்டுக்கொள்கிறோம்.

*திராவிடநாடு - 31.01.1943*


திராவிடநாடு
"இன்பத்திராவிடமே என் இலட்சியம்"

# சுதந்திரக் காதலை மதிப்போம்!




பள்ளிபாளையம் இரமேசு

இந்த பூமியில் ஒருசெல் உயிரியிலிருந்து பலசெல் உயிரிகள் பிரிணமித்ததிலிருந்து உணர்வுகளின் நிலைப்பாடுதான் செயல்பாடுகளாக உள்ளன. அந்த உணர்வுகளின் மதிப்பைப் பாதுகாப்பதுதான் உயிர்நேயமும்கூட. பசி, தாகம், உறக்கம் போல உடல்சேர்க்கை என்பதும் ஒருவகையான உணர்வுதான். அந்த அடிப்படையில், மனிதனின் கோட்பாடு மற்றும் கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறியும் ஆற்றல் மனிதனின் உணர்வுகளுக்கு உண்டு.

அந்த வகையில் பார்க்கும் பொழுது எழுத்தாளர் பெருமாள் முருகன் எழுதிய மாதொருபாகன் நூலில் சிக்கியிருக்கும் சர்ச்சை, “ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களூட னான உடல்சேர்க்கை” என்பதுதான். இந்த நாவலில் கூறப்பட்டுள்ள இந்தக் கருத்து பொய் என்றாலும், இந்தச் செயல்பாடு ஒழுக்கக்கேடு என்று சுட்டிக்காட்டினாலும், இந்த நூலை எதிர்ப்பவர்களிடம் நான் வைக்கும் வாதம் என்னவெனில்,

**நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் உடல்சேர்க்கை வைத்துள்ளீர்களா?**

இந்தக் கேள்வியை தமிழ்நாட்டிலுள்ள 8 கோடி மக்களிடமும் தனித்தனியாகக் கேட்டால்,‘ ஆம்’ என்று சொல்வார்களா? ‘இல்லை’ என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். பரபரப்பாக இயங்கிவரும் இந்த நவீன உலகில் வாழ்க்கைத்துணை இருக்க, மற்றொரு காதலில் ஈடுபட்டவர்களின் செய்திகளை தினசரிப்பத்திரிக்கைகளும், ஊடகங்களும் சுமந்துகொண்டுதான் வருகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கும் போது இரண்டாம் உறவில் இருப்பவர்களும் 8 கோடி மக்களில் ஒருவராக இருந்து ‘இல்லை’ என்ற பதிலைத்தானே சொல்லியிருப்பர்கள்? இரண்டாம் உறவு அம்பலமானதால் இவர்கள் செய்தியானார்கள். செய்தியாகாமல் இன்னும் இலைமறைவு காய்மறைவாக பலர் வாழ்ந்துகொண்டிருக்கலாம் அல்லவா? அவர்களையும் சேர்த்துப் பார்த்தால் இந்தச் சமூகத்தில் கணிசமான அளவு மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் உறவு வைத்திருக்கக்கூடும் என்பது உறுதியாகிறது.

இந்த ‘இரண்டாம் உறவு’ மக்கள் தொகையில் அனைத்து சமூகத்தினரும் அடங்கியிருப்பதற்கு வாய்ப்புண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் உறவு என்பது இன்று நேற்று முளைத்ததல்ல. ஏனென்றால் உணர்ச்சி என்பது காலம் காலமாக மனிதனோடு இருந்து வருகிற ஒன்றுதான். சரி, நம் முன்னோர்கள் ஒருவனுக்கு ஒருத்தியாகவும், ஒருத்திக்கு ஒருவனாகவும் வாழ்ந்திருப்பார்களே என்ற எதிர்க்கேள்வி வரலாம்.

போராடிப்போராடி உரிமைகளைப் பெற்ற இந்த நூற்றாண்டில்கூட, இந்தச் சமூகத்தில் பிடித்த ஒரு ஆணும் பெண்ணும் விருப்பப்பட்டு வாழ்வில் இணைய, அங்கீகாரம் கிடைக்கின்றதா? சட்டமே இணைத்து வைத்தாலும், இந்தச் சமூகம் ஒதுக்கித்தானே வைக்கிறது? அந்த வகையில் பார்க்கும்போது இந்திய ஜாதியச்சூழலில், பெரும்பாலான மனிதஇனம் சமூகத்திற்காக ஒரு பெண்ணுடன், ஆணுடன் வாழ்கிறார்கள். தன் விருப்பத்திற்காக மற்றொரு பெண்ணுடன், ஆணுடன் வாழ்கிறார்கள். அறிவியல் பெருக்கெடுத்து ஓடும் இந்தக் காலத்திலேயே இந்த நிலை என்றால், மாதொருபாகன் நாவல் மாட்டு வண்டிக் காலத்தில் பயணிக்கிறது. அந்தக் காலத்தில் இரண்டாம் உறவுகள் இல்லவே இல்லை என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

பெருமாள்முருகன் அவர்களை மன்னிப்புக் கேட்க வைத்ததால், இதுவரை இருந்த இரண்டாம் உறவுகள் இல்லை என்றாகி விடுமா? இல்லை, இனிவரும் காலங்களில் இப்படிப்பட்ட உறவுகளைத் தடுக்கத்தான் முடியுமா? இந்த

நூலாசிரியரை மன்னிப்புக் கேட்க வைத்தது மனிதநேயத்திற்கே எதிரானது. முரண்பாடு இருந்தால் இந்த நூலுக்கு மறுப்பு எழுதுங்கள். ஆய்வு மேற்கொள்ளலாம்.

மாதொருபாகன் எதிர்ப்பாளர்களின் வாதப்படி வைத்துக்கொண்டால்கூட, பெருமாள்முருகன் சொல்லியிருப்பது ஒரு கடந்தகாலப்பதிவு. இதற்கு இத்தனை போராட்டம் என்றால், இந்துக்கள் வேதமாகவும், புனிதமாகவும் பார்க்கக்கூடிய மனு தர்மம் என்ன சொல்கிறது?

பிள்ளையில்லாமல் அந்தக் கலும் நசிகிறது என்றால் ஒருபெண் தன் கணவன், மாமனார் முதலானவர்களின் அனுமதி பெற்றுக்கொண்டு தன் மைத்துனன் அல்லது தன் கணவனுக்கு ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளிகளோடு புணர்ந்து குலத்திற்குத் தக்கதான ஒரு பிள்ளைப் பெற்றுக்கொள்ளலாம். மனு: அத்தியாயம்9, சுலோகம் 59

இதுபோன்ற சாக்கடைக் கருத்துக்களைச் சுமந்துகொண்டிருப்பதுதான் மனுதர்மம். இதை எதிர்த்து இதுவரை இந்து அமைப்புகளும், ஜாதிச்சங்கங்களும் ஏன் போராடவில்லை? அந்தத் துணிச்சல் அவர்களுக்கு உண்டா?

நம்மைச்சுற்றியுள்ள நாடுகள் மிகவேகமாக முன்னேறிவரும் இந்தக் காலகட்டத்தில் ஒரு சாதாரண உடல்சேர்க்கைப் பிரச்சனைகளை உற்றுக்கவனித்து போர்க்களமாக்கி வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது. உடல்சேர்க்கையை சாதாரண நிகழ்வாக உணர்ந்ததால்தான் மேலைநாடுகள் மனிதனின் பேராற்றலை நல்ல நல்ல படைப்புகளுக்காகப் பயன்படுத்தி விஞ்ஞானத்தை வளர்த்தெடுக்கிறார்கள். இந்தப் பேருண்மையை உணராததால்தான், நம் சமூகம் இன்னும் வெறும் பயனாளிகளாகவே வாழ்ந்து வருகிறது.

இந்தச் சமூகத்தின் அதிகப்பட்ச இலட்சியம் திருமணம் செய்து பிள்ளைபெறுவது.


இந்தச் சமூகத்தின் அதிகப்பட்ச ஆராய்ச்சி என்பது யாரெல்லாம், யாருடன் தொடர்பு வைத்துள்ளார்கள் என்று ஆராய்வது.

இந்த இரண்டு பண்பாட்டுக் கூறுகளையும் உடைத்தெறியாமல் இந்த மண்ணில் அறிவியலின் அடுத்த கட்டம் சாத்தியமில்லை. தனிப்பட்ட ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அவர்களின் விருப்பத்திற்கும் சுதந்திரமான சமூக அங்கீகாரம் கிடைக்காதவரை ஒன்றுக்கு மேற்பட்ட உறவுகளும், தொடர்புகளும் தொடரும். இந்த பண்பாட்டுநிலைகளை நாவலாக, சினிமாவாக, கட்டுரைகளாக வெளிப்படுத்துபவர்களிடம் கோபப்படுவதைவிட சுதந்திரமான காதலுக்கு, உறவுகளுக்கு, விருப்பங்களுக்கு மதிப்பளிப்பதே சிறந்த தீர்வாகும்.

# பெருமாள்முருகனுக்கு ஆதரவாக ஈரோட்டில் தமிழ்நாடு மாணவர் கழகம் போராட்டம்

தமிழ்நாட்டில் தற்போது கருத்து சுதந்தரத்திற்கு எதிர்ப்பும் அச்சுருத்தலும் மற்றும் பாதிப்பும் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக மாதொருபாகன் என்னும் புத்தகத்தை எங்கள் கல்லூரியின் முன்னாள் மாணவருமான தமிழ்ப் பேராசிரியருமான தோழர் பெருமாள் முருகன் அவர்கள் எழுதியுள்ளார். மேலும் நாமக்கல் மாவட்ட தனியார் கல்லூரிகளின் கட்டண கொள்ளை குறித்தும் எழுதியுள்ளார். இதில் கருத்து வேறுபாடு இருக்குமெனில் சட்டரீதியாகவும் , கருத்தியல் ரீதியாகவும் சந்திக்காமல் ஜாதிய மதவாத அமைப்புகள் மக்களைத் தூண்டிவிட்டு பேராசிரியரை நூல் எழுதக்கூடாது என்று கட்டாயப்படுத்தி எழுதி வாங்கிக் கொண்டனர்.


இதில் நாமக்கல் மாவட்ட அரசு நிர்வாகமும், கல்வி நிறுவனங்களும் மாதொருபாகன் நூலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனவே தமிழ்நாடு மாணவர் கழகம், கருத்துச் சுதந்திரத்தையும் மாதொருபாகன் நூலுக்கு எதிர்ப்பு தெரிவித்த கல்வி நிறுவனங்களையும், ஜாதிய மதவாத அமைப்புகளையும் வன்மையாகக் கண்டித்து, ஈரோடு CNC கல்லூரியில் கருப்புப்பட்டை அணிந்து வகுப்பு புறக்கணிப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்திய அரசியல் சட்டப்பிரிவு 19 (1) ன் படி கருத்துரிமையைப் பாதுகாக்கக் கோரி தமிழக அரசை வலியுறுத்தியும், பேராசிரியர் பெருமாள் முருகன் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இப்போராட்டம் நடைபெற்றது. ஈரோடு மாவட்டப் பொறுப்பாளர் மூர்த்தி தலைமையில் இப்போராட்டதில் 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# சுயமரியாதைக்கு விதை ஊன்றிய இராபர்ட் கால்டுவெல்

(7 May 1814 – 28 August 1891)

அ.மார்க்ஸ்



**இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கும் தமிழ் பாசிஸ்டுகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என நான் தொடர்ந்து சொல்லிவருவதற்கு இன்னொரு வலுவான ஆதாரந்தான் இன்று இந்த 'லெட்டெர் பேடு'கள் தொடங்கியுள்ள கால்டுவெல் எதிர்ப்பு..**

நேற்று முந்தினம் காலை நண்பர் பொ.வேல்சாமி சற்று பதட்டத்துடன் அழைத்தார். பதட்டத்திற்குக் காரணம் இதுதான்: இமாம்உசேன் சம்சுதீன் எனும் ஒரு நபர் வேல்சாமிக்கு ஒரு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். வரும் 7ம் தேதி சென்னையில், "தமிழினத்திற்கு எதிரான கால்டுவெல்" என்றொரு கருத்தரங்கம் நடத்தப் போகிறார்களாம். 'மக்கள் மாநாடு கட்சி' என்றொரு 'லெட்டெர் பேட்' இதை ஏற்பாடு செய்துள்ளதாம். இந்த லெட்டெர் பேட் கட்சியின் செயலாளர் இந்த இமாம் உசேன் தானாம். இந்தக் "கருத்தரங்கில்" பேசுபவர்களின் பெயர்களில் அரு.கோபாலனைத்தவிர வேறு எந்த பெயரும் கேள்விப்பட்டதே இல்லை.

இந்தக் கருத்தரங்கம் மட்டுமல்ல. வரும் 14ந்தேதி அன்று, கடற்கரையில் உள்ள மொழி அறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்ஆவர்களின்சிலையை அகற்றக் கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் போராட்டம் வேறு நடத்தப் போகிறதுகளாம் இந்த லெட்டர்பேடுகள்.

வேல்சாமி கால்டுவெல் குறித்துவிரிவாகப் பயின்றவர். எழுதியவர். கால்டுவெல் குறித்து மறைக்கப்பட்ட சில உண்மைகளை வெளிக்கொணர்ந்தவரும் கூட. இப்படியான இந்த அசட்டு முயற்சிகளைக் கண்டு மனம் நொந்துதான் அந்த அதிகாலைப் போதில் என்னை எழுப்பினார்.

இந்திய வரலாறு குறித்து 2000 ஆண்டுகளாக நிலவிய கருத்துக்கள் என்பன பெரும்பாலும் இராமயண, மகாபாரத இதிகாசங்களில் நினைவு கூறப்பட்ட வம்ச பாரம்பரியங்களின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இந்தப்பார்வையில் ஒரு மிகப்பெரிய அதிர்ச்சியை உலகெங்கிலுமுள்ள இந்தியவியலாளர்களுக்கு (indologists) ஏற்படுத்தும் வண்ணமாய் மூன்று முக்கிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் அமைந்தன. இவை இந்திய வரலாற்றில் மட்டுமின்றி உலக அளவிலும் பல புதிய முடிவுகள் உருவாவதற்கும், புதிய ஆய்வுச் சட்டகம் ஒன்று உருவாவதற்கும் காரணமாயின.

மொழியியல் மற்றும் அகழ்வாய்வு அடிப்படையில் உருவான இக்கண்டுபிடிப்புகள் குறித்து முதல் முன்னோடிகள் முன்வைத்த கருத்துக்கள் அவற்றுக்குப் பிந்தைய கண்டுபிடிப்புகள், விமர்சனங்கள் ஆகியவற்றின் மூலம் மேலும் செழுமை அடைந்தன. எனினும் கால்டுவெல் உள்ளிட்ட முதல் முன்னோடிகள் முன் வைத்தவற்றின் அடிப்படைக்கூறுகளில் பெரிய மாற்றங்கள் எதையும் துறைசார்ந்த

வல்லுனர்கள் இன்றளவும் முன்மொழியவில்லை. வரலாற்று அறிஞர்களின் விமர்சனங்களைத் தாங்கி நிலை பெற்றுவிட்ட இக்கண்டுபிடிப்புகளாவன:

**1.இந்தோ ஈரோப்பிய மொழிக் குடும்பம் குறித்த கண்டுபிடிப்பு (1786):**

> *சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், கோதிக் (ஜெர்மனிய மொழிகளின் மூதாதை), செல்டிக் (ஐரிஷ் மற்றும் வெல்ஷ் மொழிகளின் மூதாதை), பழம்பெர்சியன் என்னும் ஆறு பழைய மொழிகளும் ஒரே பொதுவான மூல மொழியிலிருந்து கிளர்ந்தவையே. அந்த மூலமொழிதான் 'இந்தோ ஐரோப்பிய மொழி'.*

இந்த ஆறு பழம் மொழிகளின் சொற்களஞ்சியங்களையும், இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஜோன்ஸ் அளித்த விளக்கம் ஒரு வகையில் இந்தியச்சூழலில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இறைவனால் படைக்கப்பட்ட, ஆதி அந்தம் இல்லாத தேவபாஷையாகக் கருதப்பட்ட சமஸ்கிருதத்தைப் பிற மொழிகளைப் போலவே ஒரு குறிப்பான வரலாற்றுச் சூழலில் நிறுத்தியது ஜோன்ஸின் கோட்பாடு. தவிரவும் சமஸ்கிருதத்தை அவர் பிற நான்கு புராதன மொழிகளின் சகோதர மொழியாகத்தான் நிறுத்தினாரேயழிய மற்றவற்றின் தாய்மொழியாகக் கூறவில்லை. புரட்சிகரமான இச்சிந்தனை இந்திய வரலாற்றை எதிர்பாராத வகையில் இந்தியாவிற்கு வெளியே உள்ள "மிலேச்ச" நாடுகளின் வரலாற்றுடன் இணைத்துக் காட்டியது.

பின்னாளில் உருவான மதங்களாலும், மொழிகளாலும், எல்லைக்கோடுகளாலும் பிரிக்கப்பட்ட இந்தியா, ஈரான், அய்ரோப்பா ஆகியவற்றுக்கிடையேயான இந்த ஆதித் தொடர்பு இந்தியர்களும், ஈரானியர்களும், அய்ரோப்பியர்களும் தத்தம் வரலாறு பற்றி கொண்டிருந்த நம்பிக்கைகளில் பெரும் சிதைவுகளை ஏற்படுத்தியது.

'வரலாற்று மொழியியல்' (Historical Linguistics) என இன்று பெரிய அளவில் வளர்ந்துள்ள ஆய்வுத்துறையின் மூல ஊற்றாக ஜோன்ஸ் முன்வைத்த பிரதி அடிப்படையிலான ஒப்பீட்டு மொழியியல் அமைந்தது

**2. திராவிட மொழிக்குடும்பம் குறித்த கண்டுபிடிப்பு (1816 -1856):**

இக்கண்டுபிடிப்பிற்காக இன்று இந்துத்துவவாதிகளால் திட்டித் தீர்க்கப்படும் பிஷப் இராபர்ட் கால்டுவெல் 1856ம் ஆண்டு தனது 'திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்றும் நூலை வெளியிடுவதற்கு சுமார் 40 ஆண்டுகள் முன்னதாகவே இக்கருத்தை மிகச் சிறந்த முறையில் ஆய்வு பூர்வமாக முன் வைத்தவர் அன்றைய சென்னை ஆட்சியாளராக இருந்த ப்ரான்ஸிஸ் ஒயிட் எல்லிஸ். இளம் ஆங்கில அதிகாரிகளுக்குத் தென்னிந்திய மொழிகளைப் பயிற்றுவிப்பதற்கென அன்று உருவாகியிருந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியில் தெலுங்கு மொழி கற்பிப்பதற்கென ஏ.டி.காம்ப்பெல் எழுதியிருந்த ஒரு நூலின் முன்னுரைக் குறிப்பாக எல்லிஸின் கருத்துக்கள் முதல் முதலில் (1816) பதிவாயின. தெலுங்கு மொழியின் வேர்ப்பட்டியலை (தட்டுமாலா) பிற மொழிகளின் வேர்ப்பட்டியல்களுடன் ஒப்பிட்டு சமஸ்கிருதத்திற்கும் அதற்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதை எல்லிஸ் திருப்திகரமாக நிறுவினார். பின் அவர் தெலுங்கு மொழி வேர்களை கன்னட, தமிழ் மொழி வேர்களுடன் ஒப்பிட்டு அவற்றுக்கிடையேயான ஒப்புமையைச் சுட்டிக்காட்டினார்.

சமஸ்கிருதத்திலிருந்து வேறுபட்டஇந்த மொழிக் குடும்பம்தான் இன்று திராவிட மொழிகள் எனப் பெயர் பெற்றுள்ளது. தமிழ்,தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு, மால்டோ ஆகிய மொழிகளை எல்லிஸ் இந்தோ ஐரோப்பிய (சமஸ்கிருத) மொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்ட ஒரு மொழிக்குடும்பம் என நிறுவினார். எல்லிசின்இந்தக் கண்டுபிடிப்பை மேலும் கோட்பாட்டு ரீதியாக ஒழுங்குபடுத்தி வரையறுத்து மேற்சொன்ன மொழிகளோடு தோடா, கோடா, கோண்டி, குகுவி மற்றும் ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பகுதிகளில் பேசப்படும் ப்ராஹூய் ஆகியவற்றை சமஸ்கிருதத்திலிருந்து வேறுபட்ட "திராவிட மொழிக் குடும்பம்" என வரையறுத்து அவற்றின் ஒப்பிலக்கணத்தை வடிவமைத்தார் இராபர்ட் கால்டுவெல்..

மொழியியல் அடிப்படையிலான இக் கண்டுபிடிப்பு இன்றளவும் உலக அளவிலான மொழியியல் வல்லுனர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் கால ஒட்டத்தையும், விமர்சனக் கருத்துக்களையும் வென்று நிற்பதாகவுமே உள்ளது. இதன் மூலம் இந்திய வரலாறு குறித்த புரிதல் பெரிய அளவில் மாறியது. ஏற்கனவே இருந்த கருத்துக்கள் மீது புதிய விமர்சனங்களுக்குக் காரணமாகியது.

சமஸ்கிருதத்துடன் அடையாளம் காணப்பட்ட பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு அரசியல் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் உருவாகவும் இது வழி வகுத்தது. இரண்டாவதாக இந்தியக் கலாச்சாரத்தின் ஒற்றைத்தன்மை மறுக்கப்பட்டு பல்வேறு மொழிக் குழுமங்களின் கலாச்சாரங்கள் உருகி இணைந்து தத்தம் தனித்துவத்துடன் விளங்கும் அதன் தன்மை உலகிற்கு வெளிச்சமானது.

எல்லாவற்றிற்கும் மேலாகசமஸ்கிருதமே தமிழ் உட்பட இந்திய மொழிகளின் தாய் எனவும், அது 'தேவ பாஷை' எனவும்கூறி, தமிழ் உள்ளிட்ட வளமான மொழிப் பாரம்பரியங்களை "நீச பாஷை" யாகவும் எழுதிவைத்து இழிவு செய்து வந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழர்களும் இதர சகோதர மொழியினரும் தலை நிமிர்ந்து நின்றனர்.

"வரலாற்று மொழியியல்" என்றொரு மொழி அறிவியல் துறை ஒன்று உலகளாவிய முறையில் வளர்வதற்கும் கால்டுவெல், ஜோன்ஸ் ஆகியோரின் கோட்பாட்டு உருவாக்கங்கள் அடிக்கல் நாட்டின. தங்களின் புராதனத்தொடர்புகள் பற்றிய வரலாற்று நினைவுகளை மறந்துபோன மக்கள் குழுமங்களுக் கிடையே இருந்த வரலாற்றுத் தொடர்புகளை இத்தகைய மொழியியல் ஆய்வுகள் வெளிப்படுத்தின.

3. சிந்துவெளி நாகரிகம் குறித்த கண்டுபிடிப்பு (1924) :

புலம் பெயர்ந்து வந்த ஆரிய மொழிக் குழுவினரின் பண்பாட்டிற்கு முந்தைய ஒரு உள்நாட்டு நகர நாகரீகம் இங்கு ஓங்கியிருந்தது என்பதைச் சிந்துவெளி அகழ்வுகள் உறுதி செய்தன. அது மட்டுமல்ல இந்த நாகரிகத்தில் பயிலப்பட்டு வந்த மொழி, திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்ததுதான் என்பது தற்போது மேலும் மேலும் உறுதியாகி வருகிறது.

2000 ஆண்டு காலமாகக் குனிந்துகிடந்த தமிழினத்திற்கு சுயமரியாதையை ஊட்டிய மொழியியற் பங்களிப்புகளைச் செய்ததற்காக கால்டுவெலை இன்று காய்பவர்கள் மூன்று தரப்பினர். அவர்கள்:

1. பார்ப்பனச் சனாதனிகள் மற்றும் அவர்களின் அடிவருடிகள்: பார்ப்பனர் / பார்ப்பனர் அல்லாதார் என்கிற சுயமரியாதை அரசியலுக்கு வித்திட்டானே இந்தப் பாவி எனக் கரித்துக் கொட்டுபவர்கள். பார்க்க: இவர்கள் வெளியிட்டுள்ள "அந்தணர் வரலாறு" - இரு தொகுதிகள்.

2. 'போஸ்ட் கலோனியலிசம்' என்கிற போர்வைக்குள் ஒளிந்து கொண்டு தங்களின் காழ்ப்பை நசுக்கி நசுக்கி வெளியிடும் நவ பார்ப்பன அறிவுஜீவிகள்..

3. திராவிடக் கருத்தியலையும், தந்தை பெரியாரையும் கரித்துக் கொட்டிப் பார்ப்பன சேவை செய்யும் தமிழ் பாசிஸ்டுகள்.

இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கும் தமிழ் பாசிஸ்டுகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என நான் தொடர்ந்து சொல்லிவருவதற்கு இன்னொரு வலுவான ஆதாரந்தான் இன்று இந்த 'லெட்டெர் பேடு'கள் தொடங்கியுள்ள கால்டுவெல் எதிர்ப்பு..

"திராவிடம் வடமொழிச்சார்பற்றது என்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கியதென்றும், வட சொற்கள் என்று மயங்கும் பல சொற்கள் தென் சொற்களேயென்றும், வடமொழியில் பல தமிழ்ச் சொற்கள்கலந்துள்ளன என்றும் முதல் முதலாக எடுத்துக் காட்டி, மொழி நூற் சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல்" - இது தேவநேயப் பாவாணர்.

கால்டுவெல் இத்தோடு நிற்கவில்லை. தாழ்த்தப்பட்ட தமிழர்களை, அவர்கள் யாரும் அல்லர் அவர்களும் திராவிட மொழியினரே எனச்சொன்னவரும் கால்டுவெல்தான். இந்த வாசகங்களை நீக்கி அவரது ஒப்பிலக்கணத்தை அச்சிட்ட ஜாதிவெறியை நண்பர் பொ.வேல்சாமி வெளிப்படுத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

மனைவி எல்லிசுடன் இடையான்குடி எனும் கிராமத்தில் அடித்தள மக்களோடு மக்களாக வாழ்ந்து சமயப் பணியோடு, கல்விப்பணியும் ஆய்வுப் பணியும் ஆற்றி வாழ்ந்து மடிந்த கால்டுவெல் திருநெல்வேலி குறித்தும், அப்பகுதி மரமேறிக் கள் வடிக்கும் தொழில்புரிந்து வந்த நாடார்கள் குறித்தும் நூல்களை எழுதியுள்ளார். நாடார்கள் ஜாதிரீதியாகக் கீழ்நிலையில் உள்ளது குறித்த அவரது ஆய்வுப்பூர்வமான பதிவுகளை எதிர்த்து அப்பகுதி நாடார் ஜாதியினர் அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரை மதப் பொறுப்புகளிலிருந்து விலக்கப்போராடினர்.

இடையான்குடியின் தாளாத வெயிலில் அம்மக்களோடு மக்களாகக் கால்களில் செருப்புக்கள் இல்லாமல் நடந்து அவரது கால்கள் கொப்புளங்கள் உருவாகி வெடித்துச் சிவந்திருந்தன என ஒரு குறிப்பும் உள்ளது.

நன்றி: தோழர் அ.மார்க்ஸின் முகநூல்

பூங்குழலி



2

# காதலைப் புரிந்து கொள்வோம்

கனவாய் கற்பனையாய்
தோன்றும்
முன்னொரு காலத்தில்
எனை விழுங்கும்
உன் பார்வையை
என் ஓரப் பார்வையால் கவ்வியதும்..
சாலை கடக்கும்
சில நொடிகள்
பட்டும் படாமல்
பற்றிய கரங்களை
விட மனமின்றி
சொட்டு சொட்டாய் விட்டதும்
என் கழுத்தில் பதிந்த
உன்
முதல் முத்தத்தின் ஈரத்தைக்
காயவிடாமல்
அடுத்த முத்தம் வரை காத்ததும்
பின் தழுவியதும்
இதழ் ஒற்றியதும்
ஒருவரில் ஒருவர் கரைந்ததும்
இன்று
கண்களில் வெறுப்பும்
இதழ்களில் கசப்புமாய்
என் வீட்டில்
அன்னியனாய் நடமாடும்
உன்னுடன் தானா?

டோபாமைன் யாரைப் பார்த்தால் சுரக்கிறது? ஏன் சிலரைப் பார்த்தால் மட்டும் சுரக்கிறது என்பது ஆர்வத்தைத் தூண்டக் கூடிய ஒரு கேள்வி.

டோபாமைன் உண்மையில் எதிர்ப்பாலினரைப் பார்த்தால் மட்டும் சுரக்கக் கூடிய சுரப்பி அல்ல. அது நமக்கு பரவசம் ஊட்டும் எந்த நிகழ்விலும் சுரக்கக்கூடியது. மிகச் சிறிய குழந்தைப் பருவத்திலிருந்து இந்தச் சுரப்பி வேலை செய்கிறது.

சிறு குழந்தைகளிடம் நாம் விளையாட்டுக் காட்டும் போது, சில நேரங்களில் அவர்கள் ஒரே விளையாட்டை நம்மை மீண்டும் மீண்டும் செய்யச் சொல்வார்கள். நமக்கு அலுத்து விடும். ஆனால் அவர்கள் ஒவ்வொரு முறையும் இரசித்து நம்மை மீண்டும் மீண்டும் செய்யச் சொல்வார்கள். அதற்குக் காரணம் அந்த குறிப்பிட்ட விளையாட்டு அவர்களிடம் டோபாமைனை சுரக்க செய்கிறது. அந்தப் பரவசத்தை மீண்டும் மீண்டும் அனுபவிக்க அவர்கள் அதை செய்யச் சொல்கிறார்கள். ஒரு குழந்தைக்கு ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவங்களே.

அதனால் டோபாமைன் சுரப்பது என்பது தினப்படி நிகழ்வாகிறது. ஆனால் வயது ஏற ஏற டோபாமைன் சுரப்பதற்கான காரணங்கள் குறைகின்றன. ஆனால் அதன் தேவை அதிகரிக்கிறது. அதைவிட முக்கியமாக குழந்தையைப் போல ஒரே விசயத்தை மீண்டும் மீண்டும் செய்வதால் டோபாமைன் சுரப்பதில்லை. இன்னும் இன்னும் என்று அதிகமான அனுபவங்கள் தேவையாகின்றன. இதனால்தான் திரில்லான, திகிலான அனுபவங்களைத் தேடி இளைஞர்கள் செல்கின்றனர். திருட்டு மாங்காய் அடிப்பதிலிருந்து வேகமாக பைக் ஓட்டுவது வரை கிளர்ச்சியூட்டுவதற்கான அனுபவங்கள் எத்தனையோ உள்ளன. அவற்றில் ஒன்றுதான் எதிர் பாலின ஈர்ப்பு - காதல்.

பருவ வயதில் முதன் முதலாக எதிர் பாலினத்தவரைப் பார்த்தால் டோபாமைன் சுரக்கிறது. அதிகமாக எதிர்பாலினத்தவருடன் பழகும் வாய்ப்பற்றச் சூழலில் வளர்பவர்களுக்கு எதிர் பாலினத்தவரை பார்த்தாலே டோபாமைன் சுரக்கிறது. இன்னார் என்று இல்லை. பெண்கள் படிக்கும் பள்ளி, கல்லூரி முன் நின்று ஆண் மாணவர்கள் வேடிக்கைப் பார்ப்பது சைட் அடிப்பது இதன்

பொருட்டுதான். அந்த வயதில் குறிப்பிட்ட பெண் என்றில்லாமல் இளம் பெண்களைப் பார்த்தாலே பரவசம் ஏற்படுகிறது. அதே நிலைதான் அப்படி வளரும் பெண் பிள்ளைகளுக்கும்.

அப்படி வேடிக்கைப் பார்க்கும் காலகட்டத்தில் ஏதேனும் ஒரு பெண் தன்னைப் பார்ப்பதாக, தான் பார்ப்பதை அங்கீகரிப்பதாகத் தோன்றினால் அப்பெண்ணை "காதலிக்கத்" தொடங்குகின்றனர். இதையே எதிர் பாலின ஈர்ப்பு நிலை என்கிறது அறிவியல். இந்தக் "காதலுக்குத்" தேவை கிளர்ச்சி மட்டுமே. அதைக் கடந்த வேறு எந்த எதிர்பார்ப்பும் இதில் இல்லை. ஆனால் பார்வையில், சிரிப்பில் தொடங்குகிற அந்தக் கிளர்ச்சி அதில் கிடைக்காத போது மேலும் மேலும் என கேட்கிறது. சிறிது சிறிதாக உடல் ரீதியான தீண்டல்கள் என ஒவ்வொரு கட்டமாக கடக்க வைக்கிறது. ஒரு வேளை முழுமையான உடலுறவு வரைக்கும் சென்று விட்டால், அதன் பின் கிளர்ச்சிக்கான அனுபவங்கள் இன்றி திகைத்து நிற்கிறது இந்த "காதல்".

இந்த ஈர்ப்பு நிலை என்பது அப்பட்டமான போதை நிலையே. தன்னைச் சுற்றியுள்ளவர்களை மறப்பது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமான சிந்தனையே துளியும் இன்றி, அதற்கான பக்குவமும் அற்ற வயதில் ஏற்படும் இந்த ஈர்ப்பு ஆண் - பெண் இருவரின் எதிர்காலத்தையும் கடுமையாகப் பாதிக்கிறது. இதை காதல் என்று நம்பி அதற்காக தற்கொலை செய்து கொண்டவர்கள் மட்டுமல்ல மணம் செய்து கொண்டவர்களின் நிலையும் மிகப் பரிதாபமானது. எவ்வித மனப்பொருத்தமும் இன்றி, ஈர்ப்பினை காதல் என்று நம்பி, அதில் "மிக உறுதியாக" வேறு நின்று மணம் வரை போனவர்களை, மணத்திற்கு பின்னான வாழ்க்கை சுழற்றி அடிக்கிறது. அதைக் கையாளத் தெரியாமல் வாழ்வை ஏதேனும் ஒரு வகையில் தொலைத்து நிற்பவர்களே அதிகம். இந்தப் பெண்ணையா / ஆணையா நாம் ஒரு காலத்தில் நாம் "காதலித்தோம்" என்ற கேள்வியுடன் மனம் கசந்து போகின்றனர்.

இந்த ஈர்ப்பு நிலைக்கு அடுத்த நிலை ஏதேனும் ஒரு ஆணை பெண்ணை பார்த்தவுடன் பிடித்து போய் "காதலிப்பது". ஒவ்வொரு மனிதனுக்கு தன் எதிர்காலத் துணையை பற்றிய ஒரு பிம்பம் மனதில் உண்டு. அதில் குண இயல்புகளும் உண்டு. தோற்ற இயல்புகளும் உண்டு. தன் வருங்காலத் துணையின் தோற்றம் பற்றிய கற்பனை இல்லாத மனிதர்களை பார்ப்பது அரிது. இந்தத் தோற்றம் நம் மனதில் எப்படி உருவாகிறது என்பதே உளவியல் ரீதியாக புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மனித மனதிற்கேற்ப அழகின் இலக்கணம் மாறும் என்பது பொதுவான விதி. எனினும் நாம் சிறு வயது முதல் தொடர்ந்து கேட்கும் அழகு குறித்த உரையாடல்கள், குறிப்புகள் நம் மனதில் சில பிம்பங்களை ஏற்படுத்தி விடுகின்றன. தமிழ்ச் சூழலில் பெண் என்றால் நீண்ட முடியுடன் எலுமிச்சை நிற மேனியுடன் பூ வைத்து பொட்டிட்டு புடவை கட்டி என்று அழகுக்கான இலக்கணங்கள் நம் மூளையில் ஏற்றப்படுகின்றன. அதைப் போலவே ஆண் என்றால் பலவானாக இருக்க வேண்டும் என்பது பொதுவான விதி.

தமிழ்நாட்டில் கருப்பான ஆண் நடிகர்களே பெரும்பாலும் வெற்றி பெற்றனர். ஆனாலும் நம் நாட்டை ஆண்ட வெள்ளைக்காரர்களின் பிம்பம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக தொடங்கிய சிவப்பான ஆண்கள் மீதான மயக்கத்தின் தொடர்ச்சியாக, நுகர்வு கலாச்சாரத்தின் விளைவாக சிகப்பு தோலே அழகானது என்று மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டது. அரவிந்த்சாமியும் அஜித்துமே அழகின் இலக்கணங்களாக ஆகிப் போயினர்.

வழக்கறிஞரும் சமூக செயற்பாட்டாளருமான தோழர் அஜிதா ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு கூட்டத்தில் பேசியது இன்றும் நினைவுள்ளது. அக்காலக்கட்டத்தில் சிகப்பழகு க்ரீம்கள் குறித்த விளம்பரங்கள் அதீதமாக வந்து கொண்டிருந்த நேரம். "ரஜினிகாந்த்துக்கும் வடிவேலுக்கும் இல்லாத பணமா.. இந்த சிகப்பழகு க்ரீம்கள் உண்மையிலேயே தோலை சிவப்பாக்கும் என்றால் அவர்கள் தினமும் அதிலேயே குளிக்க மாட்டார்களா?" என்று கேட்டார் அஜிதா.

உண்மையில் ஆதி மனிதனின், அதிலும் வெப்ப நிலப் பகுதிகளில் தோன்றிய நீக்ராய்டு மற்றும் திராவிடர் மரபினத்தைச் சேர்ந்த மனிதனின் நிறம் கருப்புதான். அதுதான் அவனை சூரியனின் வெப்பத்திலிருந்து காக்கிறது. தோலில் கருப்பு நிறத்தைத் தருவது மெலனின் *(Melanin)* எனும் நிறமியாகும் (பிக்மெண்ட் *Pigment*). தோலை ஊடுருவும் புற ஊதாக் கதிர்களை ஒழுங்கு முறைப்படுத்தவே தோலில் நிறமாற்றத்திற்கான பரிமாணம் நிகழ்ந்தது.

வெப்பம் குறைந்த நிலப்பகுதிகளில் உள்ள மனிதர்களுக்கு இந்த நிறமியின் தேவை குறைவாகவே உள்ளது. அதனால் தோலில் இந்த நிறமியும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாகவே தோல் வெளுக்கிறது. ஆக கருப்பு

அல்லாத எந்த நிறத்தவருக்கும் இருப்பது நிறமி குறைபாடே. அதிலும் வெப்ப நாட்டில் வாழும் நமக்கு தோலின் நிறம் கருப்பாக இல்லை என்றால் அதற்கு இரு காரணங்கள் மட்டுமே இருக்கக் கூடும். ஒன்று இயல்பான நிறமிக் குறைபாடு. அல்லது பல தலைமுறைகளுக்கு முன் நடந்திருக்கக் கூடிய இனக்கலப்பு.

தோலின் நிறம் வெளுக்க வெளுக்க இந்த காரணங்களும் வலுப் பெறுகின்றன. இதனால் புற ஊதாக் கதிர்கள் ஊடுருவல் எளிதாகி தோல் நோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். இந்தியா மாதிரியான வெப்ப நாட்டிற்கு வரும் மேற்கத்தியர்கள், வெள்ளை நிறத்தவர்கள் வெயில் காலத்தில் சருமம் வெந்து போய் தோல் நோய் ஏற்பட்டு சிகிச்சைப் பெறுவதை பார்க்கலாம். எனவே சிகப்பு நிறம் என்பது ஒன்றும் பெருமைக்குரிய ஒன்றல்ல. அது இயற்கையின் அமைப்பு. அவ்வளவே. நிறம் மட்டுமல்ல, ஒரு மனிதனின் உயரம், தோற்றம் என எதுவுமே அவரது சாதனை அல்ல. அதனால் அது குறித்து பெருமை கொள்வதற்கோ சிறுமை கொள்வதற்கோ எதுவும் இல்லை.

ஆனால் நுகர்வு கலாச்சாரத்தின் விளைவாக அழகுக்கான முக்கியத்துவம் அதிகரித்துள்ள இன்றைய சூழலில் காதலுக்கும் அழகுக்குமான உறவு வலுபட்டுள்ளது.

பொது சமூகம் நம் மீது திணிக்கும் அழகுக்கான இலக்கணங்களைக் கடந்து நம் ஒவ்வொருவரின் மனதிலும் அழகைப் பற்றிய ஓர் உருவகம் உள்ளது. இந்த உருவகம் மிகச் சிறிய வயதிலேயே உருவாகிவிடுகிறது. இந்த உருவகத்தின் உருவாக்கத்தில் குழந்தைப் பருவத்தில் நம்மை பாதித்த பல பிம்பங்கள் பங்கு கொள்கின்றன. குழந்தைப் பருவத்தில் நம்மை மிகவும் நேசித்த அல்லது நாம் மிகவும் நேசித்த எதிர் பாலினர், நமக்குள் முதன் முதலாக பிரமிப்பை ஏற்படுத்தியவர்கள் இதில் முதலாவதாக வருகின்றனர். இதனால்தான் பெரும்பாலும் ஆண்களுக்கு தாயும் அதற்கு அடுத்தபடியாக தங்கள் பெண் ஆசிரியரும் அழகானவர்களாகத் தெரிகின்றனர். எந்த ஓர் ஆண் மனதிலும் தங்கள் சிறு வயது நினைவாக ஓர் அழகான பக்கத்து வீட்டு அக்கா, அல்லது ஒரு ஆசிரியர் இப்படி யாராவது இருப்பார்கள். அவர்கள் நமக்கு அழகாக தெரிந்ததற்கு காரணம் அவர்களின் புற அழகை விட அவர்கள் நம்மிடம் பழகிய விதம் அல்லது அவர்களிடம் பிரமிப்பை ஏற்படுத்திய ஏதோ ஒன்றுதான் காரணம். ஆனால் அந்த பிம்பம் நம் மனதில் ஆழமாக பதிந்து போய் விடுகிறது.

மறுபுறம் ஒரு பெண் என்றால் இப்படியான உடல் அளவுகளோடு இருக்க வேண்டும் என்று ஊடகங்கள் மீண்டும் மீண்டும் மூளைச் சலவை செய்கின்றன. இதற்கு ஆண், பெண் இருவருமே பலியாகின்றனர். ஆணைப் பொறுத்த வரையில் அந்த அளவுகளோடு உள்ள பெண்கள் மட்டுமே காதலிக்க, உறவு கொள்ளத் தகுதியானவர்கள் என்ற எண்ணம் அழுத்தமாக பதிகிறது. பெண்ணைப் பொறுத்த வரையில் அந்த அளவுகளோடு தன்னை இருக்க வைக்க பெரும்பாடு படுகிறாள். அவ்வாறு இல்லை என்றால் அது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. அதிக உடல் எடை என்பது ஆண் பெண் இருவருக்குமே தீங்கானது. ஆனால் ஆரோக்கியத்தின் பொருட்டு உடல் எடை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு பதில் அழகின் பொருட்டு வைத்திருக்க முனைவதும், அதற்காக பட்டினி கிடப்பது போன்றவை ஆரோக்கியத்திற்கு கேடானவையாகும்.

உண்மையில் ஒரு பெண்ணின் உருவ அமைப்பில் உள்ள அறிவியலை எவரும் புரிந்து கொள்வதில்லை. இடை சிறுத்து, பின் பகுதி சற்று பெருத்து இருப்பது என்பது குழந்தைப் பிறப்பிற்கு ஏற்ற உடல் வாகு. கருப்பையில் குழந்தையை தாங்குவதற்கும், பிரசவ நேரத்தில் குழந்தையை உந்தி வெளியே தள்ளுவதற்கும் இந்த உடல் வாகு வசதியானது. இதன் பொருட்டே இயற்கையாகவே பெண்களின் உடல் அமைப்பு அவ்வாறு உள்ளது. ஆரோக்கியமற்ற உணவு பழக்கங்களினால் ஆண்களுக்கு தொப்பைப் போடுவது போலவே பெண்களுக்கும் தொப்பை போடும் போது இந்த உடல் வாகு மாறுகிறது. இது குழந்தைப் பிறப்பிற்கும் இயல்பாகவே இருபாலரின் ஆரோக்கியத்திற்கும் கேடானது. அதைப் போலவே பெண்களின் மார்பு குழந்தைகளுக்கு பாலூட்டும் பொருட்டு எல்லா பாலூட்டி உயிரினங்களுக்கு உள்ளது போலவே உருவானதே ஒழிய உடலுறவிற்காகவோ, பாலின ஈர்ப்புக்காகவோ உருவானது அல்ல.

இந்த நிலையில் பெண்ணின் தோற்றம் குறித்தும், தனக்குப் "பிடித்த அளவுகளுடனான பெண்" என்பதைக் குறித்தும் உள்ள ஆணின் எதிர்பார்ப்பு என்பது, சமூகத்தின் பொதுப்புத்தியில் உள்ள மதக் கருத்துக்களும், நுகர்வுக் கலாச்சாரத்தின் பிரதிபலிப்புகளுமே அன்றி இயற்கையான இயல்பான ஒன்றல்ல.

ஆண்களை முதன் முதலாக ஈர்ப்பது பெண்ணின் தோற்றம் எனில், பெண்களை எது ஈர்க்கிறது? வரும் இதழ்களில் பார்ப்போம்.




# தகுதி, திறமை கூப்பாடுகளுக்குப் பதிலடி

யாழ்மொழி



இடஒதுக்கீடு சமூகநீதிக்கானது என்ற கருத்தியலுடையோர், கற்றுத்தெளிந்தவர்கள் இன்னும் பல துறைகளில், பல்வேறு கோணங்களில் இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்!

**‘இடஒதுக்கீட்டால் தகுதி போய்விட்டது! திறமைபோய்விட்டது!’ என்று பார்ப்பனர்களும், தற்போது இடஒதுக்கீட்டால் பலன் அனுபவித்து, அதனால் முன்னேறிய சில அதிமேதாவிகளும் கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கும் வேளையில், அதற்குப்பதிலடிகொடுக்கும் வகையில் வெளியாகியுள்ளது அஷ்வினி தேஷ்பாண்டே மற்றும் தாமஸ் இ.வெய்ஸ்காஃப் ஆகியோரின் ஆய்வறிக்கை.**

அஷ்வினி தேஷ்பாண்டே தில்லி பல்கலைக்கழகத்தின், பொருளாதாரத்துறைப் பேராசிரியர்; வெய்ஸ்காஃப் அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்துறைப் போராசியர். இருவரும் இணைந்து, “ 1.3 மில்லியனிருந்து 1.4 மில்லியன் பணியாளர்கள் பணியாற்றும் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனமான இந்திய இரயில்வே துறையில் இடஒதுக்கீட்டு முறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பணியாளர்களால் உற்பத்தித்திறன் ( Productivity ) குறையவில்லை; மாறாக சில துறைகளில் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது” என்ற உண்மையை வெளிப்படுத்தும் வகையில் ஓர் ஆய்வை நடத்தியுள்ளனர்.

“டஸ் அஃபிர்மேட்டிவ் ஆக்ஷன் ரெட்யூஸ் ப்ரொடக்டிவிட்டி (Does affirmative action reduce productivity? A case study of the Indian Railways)” என்ற தலைப்பிலான அவ்வாய்வறிக்கை, அறிவியல், மருத்துவம், சட்டம் மற்றும் வர்த்தகத்துறைகளில் சிறப்புமிக்க, முறையான, நம்பகத்தன்மை வாய்ந்த ஆய்வுத்தகவல்களை வழங்கும் ஆய்விதழ்களை வெளியிடும் எல்சேவெர்(Elsevier) நிறுவனத்தின் வேர்ல்ட் டெவலப்மெண்ட் ஜேர்னலில் வெளியிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோருக்கு 15 % இடஒதுக்கீடும், பழங்குடியினருக்கு 7.5 % இடஒதுக்கீடும் உள்ள இரயில்வே துறையில் நான்கு நிலைகளில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன . குரூப் A விலிருந்து குரூப் D வரை. குரூப் A தான் உயர்பதவி. குரூப் A-விலுள்ள ஓர் பணியைப்

பெறுவதற்கு அகில இந்திய சிவில் சர்வீஸ் தேர்வை எழுதவேண்டும்; அதில் வாங்கும் மதிப்பெண் அடிப்படையில் ரேங்க் வழங்கப்படும்; அந்த ரேங்க் அடிப்படையில் பணியிடங்கள் நிரப்பப்படும். குரூப் B-யிலுள்ள பணிகள் குரூப் சி பணியாளர்களைப் பதவி உயர்வு செய்வதன் மூலமோ, போட்டித் தேர்வுகளின் வழியாகவோ நிரப்பப்படுகின்றன.

குரூப் A, B-யில் பணிபுரிபவர்களை மட்டுமே கணக்கில் கொண்டு இந்தஆய்வை அஷ்வினி மற்றும் வெய்ஸ்காஃப் நடத்தியுள்ளனர். “அதுஎப்படி 2 நிலைகளில் உள்ள பணியாளர்களை மட்டும் கணக்கில் கொண்டு எஸ்.சி, எஸ்.டி வகுப்பினரால் ரயில்வே துறையின் உற்பத்தித்திறன் குறையவில்லை எனக்கூறமுடியும்?” என்று இடஒதுக்கீட்டு முறையை எதிர்க்கும் சிலஅதிமேதாவிகள் கேள்வி எழுப்புகின்றனர்

அவர்கள் ஆய்வறிக்கையை முழுமையாகப் படித்திருந்தால் இவ்வாறான கேள்விகளை எழுப்பியிருக்க மாட்டார்கள். ஆங்கில நாளேடான இந்துவில் வெளிவந்த செய்தியைமட்டும் அரைகுறையாகப் படித்துவிட்டுக் கேள்விகேட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஏனெனில், அக்கேள்விக்கான பதில் அந்த ஆய்வறிக்கையிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குரூப் C ஓரளவிற்குத் திறமையான, நிபுணத்துவம் தேவைப்படாத எழுத்தர் பணியாளர்களை (Clerical staff) உள்ளடக்கியது. குரூப் D உடனாட்கள் (Attenders) மற்றும் துப்புரவுத் தொழிலாளர்களை உள்ளடக்கியது. தன்னை ஓர் எஸ்.சி, எஸ்.டி என்று அடையாளப்படுத்தி இடஒதுக்கீட்டின் மூலம் பணியைப் பெறுபவர்கள் A, B குரூப்களில் தான் உள்ளனர். குரூப் D பணிகளைப் பெற மிகக்குறைவான திறமையே எதிர்பார்க்கப் படுவதால் அப்பணிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இடஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ளவது இல்லை.

குறிப்பாக, உற்பத்தித்திறனில் பெரிதளவில் தாக்கத்தை ஏற்படுத்துவது குரூப் A,B பணியாளர்கள் தான். எனவேதான், குரூப் A+B-ஐ எங்கள் ஆய்விற்குப் பயன்படுத்திக் கொண்டோம் என்று தங்கள் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலஅளவில் (1980-2002), இரயில்வே துறையில் மொத்தம் 9 மண்டலங்கள் இருந்தன. அதில் வடக்கு இரயில்வே (Northern Railway) மண்டலத்தில் மட்டும் எஸ்.சி, எஸ்.டி. இடஒதுக்கீட்டின் மூலம் பணியைப் பெற்றவர்களின் எண்ணிக்கையைப் பற்றிய தரவுகள் இல்லாத காரணத்தால் அம்மண்டலத்தை மட்டும் நீக்கி மற்ற மண்டலங்கள் அனைத்தையும் உள்ளடக்கி ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

**“ தகுதி, திறமை கூப்பாடுகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வை நாம் அனைவரும் வரவேற்க வேண்டிய இத்தருணத்தில் ஆழ்ந்து சிந்திக்கும் வகையில் ஓர் வேலைத் திட்டமும் நம்முன்னே இருப்பதாகத் தோன்றுகிறது.**

ஒவ்வொரு தனிநபரின் திறமையை வைத்து உற்பத்தித்திறனை அளவிட முடியாதென்பதால், மண்டலம் வாரியாக உள்ள தரவுகளை வைத்து, மிகச்சரியான ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தி தகுதி, திறமை கூப்பாடுகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வை நாம் அனைவரும் வரவேற்க வேண்டிய இத்தருணத்தில் ஆழ்ந்து சிந்திக்கும் வகையில் ஓர் வேலைத்திட்டமும் நம்முன்னே இருப்பதாகத் தோன்றுகிறது.

1960- ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இதுபோன்ற பலஆய்வுகள் நடந்துள்ளன. ஆனால் இடஒதுக்கீடு முறைக்கு நீண்டவரலாறு கொண்ட இந்தியாவில் இம்மாதிரியான ஓரிரு ஆய்வுகள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. அதுவும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் ‘இடஒதுக்கீடு கூடாது’ என்ற தங்கள் கருத்தை நிலைப்படுத்துவதற்காகவே நடத்தியுள்ளனர். எனவே, இடஒதுக்கீடு சமூகநீதிக்கானது என்ற கருத்தியலுடையோர், கற்றுத்தெளிந்தவர்கள் இன்னும்பல துறைகளில், பல்வேறு கோணங்களில் இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்!

செய்திஆதாரம் :“Does Affirmative action reduce Productivity? – A case study of the Indian Railways” @ http://www.sciencedirect.com/science/article/pii/S030575 0X14001521

அதி அசுரன்

1

# அன்று மனுதர்மம் இன்று தமிழ்த்தேசியம்!

பெரியார் மீதும், திராவிடர் என்ற கருத்தியல் மீதும் பெரியார் காலம் முதல் இந்தக்காலம் வரை தமிழ்த் தேசியமாயைக்காரர்கள் அனைவராலும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் குற்றச்சாட்டுக்களில் முக்கியமான ஒன்று.

“பலநூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கு வந்து தமிழர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் சக்கிலியர், நாயக்கர், நாயுடு, கவுடர், ஒக்கலிகர் போன்ற சில ஜாதியினர் அந்நியர்கள். சுத்தத் தமிழர்கள் அல்ல. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பெரியாரே ஒரு தெலுங்கர், பெரியார் ஒரு கன்னடர்.”

பிறப்பை அடிப்படையாக வைத்து மனித இனத்தைப் பிரிப்பதும், அந்தப் பிரிவினையிலும் உயர்வு, தாழ்வு கற்பிப்பதும், அந்த ஏற்றத்தாழ்வை இன்றளவும் நடைமுறைப்படுத்துவதும் மனுதர்மத்தின் பணி, இந்து மதத்தின் பணி. அந்த வர்ணாஸ்ரம பாணியிலேயே, பார்ப்பன முறையிலேயே நமது தமிழ்த்தேசிய மாயைக்காரர்களும் ஒடுக்கப்பட்ட மக்களை பல கூறுகளாகப் பிரித்துவருகிறார்கள்.

மனித இனத்தை பிரித்துப் பார்க்கவேண்டும் என முடிவு செய்துவிட்டால் பல்வேறு வகைகளில் பிரிக்கலாம். உடலின் நிறத்தை வைத்துப் பிரிக்கலாம். அதற்குள்ளேயே உயரத்தை வைத்து ஆறடி உயரமுள்ளவர்கள் - ஆறடிக்கும் குறைவான உயரமுள்ளவர்கள் என்று பிரிக்கலாம், அதற்குள்ளேயும் உடல் பருமனை அடிப்படையாக குண்டானவர்கள் - ஒல்லியானவர்கள் என்று பிரிக்கலாம். வேகமாக ஓடுபவர்கள் - ஓட முடியாதவர்கள் என்று பிரிக்கலாம், ஆனால் எதற்காகப் பிரித்துப்பார்க்க வேண்டும்? என்ன காரணத்துக்காகப் பிரித்துப்பார்க்க வேண்டும் என்பது அடிப்படையான கேள்வி.

மனித குலத்தின் ஆதிக்கவாதிகள் - அந்த ஆதிக்கவாதிகளால் சுரண்டப்படுகிறவர்கள் என்று இரண்டு பிரிவினை அவசியம் தேவை. ஆதிக்கவாதிகளை அடையாளம் கண்டு ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் உருவாக இது பயன்படும். அப்படியில்லாமல் ஒடுக்கப்படும், சுரண்டப்படும் இனத்திற்குள்ளேயே நுணுக்கி நுணுக்கி பிரித்துப் பார்ப்பது, பேசுவது யாருக்குப் பயன்படும். ஆதிக்கவாதிக்குத்தானே பயன்படும். இந்துமதத்தால், மனுதர்மத்தால், இந்திய தேசியத்தால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்குள்ளேயே பிறப்பின் அடிப்படையில் பிரிவினைகளை உண்டாக்குவதும், அத்தகைய பிரிவினைகளையே பெரிதாக்கிக் காட்டுவதும் முக்கிய எதிரியான, ஆதிக்கவாதிகளான பார்ப்பனர்களைக் காப்பாற்றுவதுமான காரியங்களைத் தொடர்ந்து பலகாலமாக தமிழ்த்தேசியமாயைக்காரர்கள் செய்துவருகிறார்கள்.

> மனுவின் முறையில் பிறப்பின் அடிப்படையில் சுத்த இரத்தப்பரிசோதனை செய்து பார்த்தால் இங்கு யாரும் தமிழன் இல்லை. திராவிடனும் இல்லை.
>
> பெரியாரின் ஆரியர் – திராவிடர் என்ற பிரிவினைகள் இரத்த அடிப்படையிலோ, பிறப்பின் அடிப்படையிலோ கடைபிடிக்கப் படுவதல்ல. பெரியாரே இதைத் தெளிவாக விளக்குகிறார்.

**ஆக, இராஜராஜனின் தந்தை இரண்டாம் பராந்தக சோழன் என்ற சுந்தரசோழனே தமிழர் - மலையாளி - தெலுங்கர் - இராஷ்ட்டிரகூடர் கலப்பில், நான்கு இனக்கூட்டணியில் கருவானவன் தான்.**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பல்வேறு காரணங்களால் இங்கு வந்து தமிழ்நாட்டுக் குள்ளேயே பெண் எடுப்பது, பெண் கொடுப்பது போன்ற மணஉறவுகளை வைத்துக்கொண்டு, தம் வருமானத்தையும் சொத்துக்களையும் தமிழ்நாட்டுக்குள்ளேயே வைத்துள்ளவர்களும், ஆந்திராவிலோ, கர்நாடகாவிலோ எந்த தொடர்பும் இல்லாமல், வேர்கள் இல்லாமல், தமிழர்களுக்கு உள்ள தீண்டாமைக் கொடுமைகளை தாமும் ஏற்று, தமிழர்களுக்குள்ள ஜாதி இழிவுகளைத் தாமும் சுமந்து, தமிழர்களாகவே வாழ்பவர்களுமான இலட்சக் கணக்கான மக்களை பிறப்பு பார்த்து, ஜாதி பார்த்து அவர்களை வேறுபடுத்திப் பார்க்கிறார்கள் தமிழ்த் தேசியர்கள். அவர்களை அந்நியர்கள் என்றும் சுத்தத்தமிழர்கள் அல்ல என்றும் அறிவிக்கிறார்கள்.

ஆனால் உண்மையிலேயே ஆந்திராவில் வாழ்ந்துவரும் உண்மையான தெலுங்கு இனத்துக்கும், நேரடியான மலையாள இனத்துக்கும், நேரடியான கன்னட இனத்துக்கும் பிறந்த மன்னர்களையும் பார்ப்பனர்களையும் தமிழர்கள் என்றும், தமிழ்ப்பேரரசன் என்றும் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகிறார்கள். தாய்லாந்துக்குப் போய் தமிழை முற்றிலும் மறந்து உடன் கொண்டுசென்ற தேவாரம், திருவாசகத்தை வைத்து இன்றுவரை இராஜகுருவாகவே வாழ்ந்துவரும் பார்ப்பனர்கள் தமிழர்களாம்.

தெலுங்குப் பரம்பரையில் பிறந்து, தெலுங்கர்களால் வளர்த்து ஆளாக்கப்பட்டு, மலையாளப்பெண்ணை மணந்து, தெலுங்கர்களுக்காக அண்டை நாட்டினருடன் போராடி தெலுங்கு தேசங்களை உருவாக்கி அவர்களுக்கே கொடுத்து, உடன்பிறந்த சகோதரியையும், தனது மகளையும் ஆந்திர தெலுங்கு தேசத்து ராஜாக்களுக்கு மணம்முடித்துக்கொடுத்து, கொள்வினை கொடுப்பினைகளை அந்நிய நாட்டவருடன் மட்டுமே செய்து கொண்ட இராஜராஜன் தமிழனாம்! தமிழ்ப்பேரரசனாம்!

தமிழ்த்தேசியர்களின் சுத்த இரத்த அளவுகோலை - சுத்தத் தமிழர்களைக் கண்டறியும் சோதனையை வரலாற்று அடிப்படையில் அவர்களுக்கே திருப்பிவிட்டுப் பார்த்தால் இங்கு இன்றைய நிலையில் சுத்தத் தமிழன் என்று யாரும் இல்லை என்ற உண்மையைக் கண்டறியலாம். தமிழ்த் தேசியர்களின் பிரிவினையில் உள்ள நேர்மையற்ற தன்மையையும் அறியலாம்.

**தமிழன் என்றால் யார்? தமிழன் என்பதற்கு வரையறை என்ன?**

முருகன், விநாயகன், இராமன் போன்ற பார்ப்பனக் கடவுளர்களுக்கு அடுத்தபடியாக மிக அதிகமாகப் பார்ப்பனர்களுக்குப் பயன்பட்டவன் இராஜஇராஜசோழன். அந்த இராஜராஜன் தான் தற்போது தமிழ்த்தேசியர்களின் கனவுநாயகன். எனவே முதலில் அவனது பரம்பரையை தமிழ்த்தேசியர்களின் பாணியிலேயே பிறப்புச்சோதனைக்கு உட்படுத்துவோம்.

திணைவழிப்பட்ட நாகரீக காலத்திற்குப் பிறகு அரசுகள் தோன்றியபிறகு சேர, சோழ, பாண்டியர்களுக் கிடையில் கணக்கிலடங்காத போர்கள் நடைபெற்றன. மூன்றுபுறமும் கடலால் சூழப்பட்டிருந்த நிலம் முழுதும் தமிழ் மன்னர்களின் ஆட்சிதான் நிலவியது. படையெடுப்பு களாலும், போர்களாலும் இம்மூன்று அரசுகளுக்குள்ளும், அந்த அரசுகளில் வாழ்ந்த மக்களுக்குள்ளும் இரத்தக்கலப்பு நடந்தே இருக்கும். போர்களால் இரத்தக்கலப்பு நடைபெறுவது உலகெங்கிலும் இன்றுவரை நடந்துகொண்டுதான் இருக்கின்றன. சங்க காலத்தில் மூன்று மன்னர்களும் தமிழ்பேசியவர்களே. ஆனால் அதன் பிறகு மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் தோன்றியபிறகு, தெலுங்கு,

கன்னட, மராட்டிய அரசுகள் தோன்றிய பிறகு நடந்த ஆதாரப்பூர்வமான இரத்தக்கலப்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

கி.பி. 846 முதல் கி.பி 1279 வரையிலான பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் "பிற்காலச்சோழர் சரித்திரம்" என்னும் பெயரில் மூன்று பாகங்களாக எழுதியுள்ளார். அமிழ்தம் பதிப்பகம் வெளியிட்ட அந்நூலில் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சில செய்திகள்.

பிற்காலச்சோழப் பேரரசுக்கு வித்திட்ட விஜயாலயச் சோழனை அடுத்து கி.பி. 871 முதல் கி.பி 906 வரை சோழநாட்டை ஆண்ட முதல் ஆதித்தசோழனே வேற்றுமொழி இனத்தவருடன் இரத்தக்கலப்பை தொடங்கிவிட்டான். தற்போதைய மகாராஷ்ட்ராவிற்கும் கர்நாடகாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் கி.பி. 890 முதல் கி.பி. 915 வரை அரசாண்ட இராஷ்ட்ரகூட மன்னனான இரண்டாம் கிருஷ்ணதேவனின் மகளான இளங்கோப்பிச்சிதான் முதல் ஆதித்தசோழனின் பட்டத்தரசி. பிற்காலச்சோழப் பேரரசில் நடந்த முதல் மாற்று இனக்கலப்பு இது. சோழனுக்கும் இராஷ்ட்டிரகூடனுக்கும் கலந்து பிறந்த முதல் பராந்தக சோழன் கி.பி. 907 முதல் கி.பி. 953 வரை சோழ நாட்டை ஆண்டான்.

இராஷ்ட்ரகூடர் - தமிழர் கலப்பில் பிறந்த முதல் பராந்தகசோழனின் பட்டத்தரசி யார் தெரியுமா? மலையாள மொழி உருவானதற்குப் பிந்தைய காலகட்டத்தில் வாழ்ந்த சேரநாட்டு இளவரசி கோக்கிழானடி. பராந்தகனின் மற்றொரு அரசியும் கேரளாவைச் சேர்ந்தவள்தாள். இப்படி இராஷ்ட்டிரகூடர் - தமிழர் - மலையாளி கூட்டுக்கலப்பில் பராந்தகனுக்குப் பிறந்த மகள் வீரமாதேவி மீண்டும் இராஷ்ட்டிரகூட இளவரசன் நான்காம் கோவிந்தனுக்கு மனைவியாகிறாள்.

பராந்தகனுக்குப் பிறகு கி.பி.953 முதல் கி.பி.957 வரை சோழநாட்டை பராந்தகனின் மகன் கண்டராதித்த சோழன் ஆண்டான். அவனும் தன் பங்குக்கு ஒருவேற்றுஇன இரத்தக்கலப்பை உருவாக் கினான். கண்டராதித்தனின் பட்டத்தரசியும் ஒரு

**தமிழ்த்தேசியர்களின் சுத்த இரத்த அளவுகோலை - சுத்தத் தமிழர்களைக் கண்டறியும் சோதனையை வரலாற்று அடிப்படையில் அவர்களுக்கே திருப்பிவிட்டுப் பார்த்தால் இங்கு இன்றைய நிலையில் சுத்தத் தமிழன் என்று யாரும் இல்லை என்ற உண்மையைக் கண்டறியலாம்.**

மலையாளம் பேசும் கேரளப் பெண். அவள் பெயர் செம்பியன் மாதேவி. கண்டராதித்த சோழனுக்குப் பிறகு அவனது தம்பி அரிஞ்சயசோழன் பட்டத்துக்கு வருகிறான்.

இந்த அரிஞ்சய சோழன்தான் இன்றைய தமிழ்த்தேசியர்கள் சிலரின் கனவுநாயகனான, இலட்சியப் பேரரசனான இராஜராஜனின் பாட்டனாவான். இராஜராஜனின் பாட்டனான அரிஞ்சயனே இராஷ்ட்ரகூடர் - தமிழர் - மலையாளிகளின் கூட்டணியில் கருவானவன்தான். அந்தக் கூட்டணி போதாதென்று அரிஞ்சயனும் தன் கடைமைக்காக தானும் ஒரு புது இனத்தோடு இரத்தக்கலப்பை உருவாக்குகிறான். ஆம், அரிஞ்சய சோழனின் பட்டத்தரசி வீமன்குந்தவை என்பவள் தெலுங்கு மொழி பேசிய ஆந்திரப் பெண் ஆவாள். அரிஞ்சயனின் மற்றொரு மனைவி கோதைப்பிராட்டி ஒரு மலையாளப் பெண். மற்றொரு துணைவியான கல்யாணி வைதும்பராயன் என்ற தெலுங்கு மன்னனின் மகள்.

ஆக, இராஜராஜனின் தந்தை இரண்டாம் பராந்தக சோழன் என்ற சுந்தரசோழனே தமிழர் - மலையாளி - தெலுங்கர் - இராஷ்ட்டிரகூடர் கலப்பில், நான்கு இனக்கூட்டணியில் கருவானவன் தான். இந்த சுந்தர சோழனுக்கு மனைவியும், துணைவியுமாக பராந்தகன் தேவியம்மன், வானவன் மாதேவி என இருவர் இருந்தனர். பராந்தகன் தேவி வழக்கம்போல ஒரு மலையாளப்பெண். இராஜராஜனின் தாயார் வானவன் மாதேவி வைதும்பர்கள் என்னும்

தெலுங்கர்குலப் பெண். இராஜராஜன் தன்னுடன் பிறந்த சகோதரி குந்தவையை கீழைச் சாளுக்கியனான வல்லவரையன் வந்தியத் தேவன் என்ற ஆந்திர இளைஞனுக்குத்தான் மணம் முடித்தான். அதோடு தனது மகள் குந்தவையையும் சாளுக்கியனான விமலாதித்தன் என்ற ஆந்திர இளைஞனுக்குத்தான் மணம்முடித்துக்கொடுத்துள்ளான். குந்தவை என்ற பெயரே தமிழச்சிகள் வைத்துக் கொள்ளும் பெயர் அல்ல என்று சதாசிவப் பண்டாரத்தார் விளக்குகிறார்.

விஜயாலயச் சோழனை அடுத்து பட்டத்துக்கு வந்த முதல் பராந்தகசோழன் காலம் முதல் இராஜராஜன் காலம் வரை ஒவ்வொரு சோழனும் தான் பெண்கொடுத்த, பெண் எடுத்த சாளுக்கிய, இராஷ்ட்ரகூட, மலையாள, கன்னட அரசுகளுக்காக பல்வேறு போர்களை தமிழ்ப்படையினரைக் கொண்டு நடத்தியுள்ளனர். மேலைச் சாளுக்கியர்களுக்கும், கீழைச் சாளுக்கியர்களுக்கும் இடையே நடந்த போர்கள், இராஷ்ட்டிர கூடர்களுக்கும், சாளுக்கியர்களுக்குமிடையே நடந்த போர்கள், கங்கர்களுக்கும் வாணர்களுக்கும் நடந்த போர்கள், மகாராஷ்ட்ராவினருக்கும், ஆந்திரர்களுக்குமிடையிலான போர்கள் என பல்வேறு வகைப்பட்ட போர்களுக்கு சோழப்படைகள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தந்த அரசுகளோடு சோழர்கள் கொண்ட மண உறவுகள் காரணமாக அவர்களுக்கு ஆதரவாக தெலுங்கர்களின் வெற்றிக்காகவும், சில சமயம் கன்னடர்களின் வெற்றிக்காகவும், சில சமயம் மராட்டியர்களின் வெற்றிக் காகவும், சில சமயம் மலையாளிகளின் வெற்றிக்காகவும் சோழர்களால் குறிப்பாக இராஜ ராஜசோழனாலும் தமிழர்கள், தமிழ்ப்படை வீரர்கள் இலட்சக்கணக்கில் பலியாக்கப் பட்டுள்ளனர்.

எல்லாவற்றையும்விட மிகக் கொடுமையான வரலாறுகளும் மூவேந்தர்கள் காலத்தில் நடந்துள்ளன. தெலுங்கர், கன்னடர், மராட்டியர் வெற்றிக்காக தமிழ்ப்படையினர் சோழர்களால் பயன்படுத்தப்பட்டது போல சிங்களனின் வெற்றிக்காகவும் சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள் உழைத்திருக் கின்றனர். இராஜராஜ சோழனின் தந்தையே நான்காம் மகிந்தன் என்ற சிங்கள மன்னனோடு நட்புரிமை பூண்டு உடன்படிக்கை செய்துகொண்டு பலகாலம் சிங்களரின் நட்பு நாடாக சோழநாட்டை வைத்திருக்கிறான்.

இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் கி.பி.1007 இல் அப்போது மராட்டியப் பகுதியாக இருந்த தார்வார் பகுதிக்கு இராசேந்திரசோழனின் படை சென்று பெரும் போர்புரிந்து பெரும் செல்வங்களைக் கொண்டு வந்ததோடு தமிழ்ப்படையினர் ஆயிரக்கணக்கான பெண்களை மனைவியராக்கி தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தனர் என்று ஹொட்டூர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வாறு வேற்று இனத்தவரோடு அந்நிய இனத்தவரோடு சோழமன்னர்கள் கொண்ட மண உறவுகளுக்காக போரிடச் சென்ற தமிழ்ப்படையினர் ஒவ்வொரு வரும் தத்தம் பங்குக்கு வேற்றுஇன இரத்தக்கலப்புகளை உருவாக்கியே வந்துள்ளனர். தமிழினத்தை ஒரு சர்வதேசிய இனமாக மாற்றியுள்ளனர்.

பிறப்பிலோ, வளர்ப்பிலோ, அடையாளப்படுத்திக் கொள்வதிலோ, கொள்வினை - கொடுப்பினையிலோ பல நூற்றாண்டுகளாக பிற்காலச் சோழர்கள் சுத்தத்தமிழர்களாக இல்லை.

இராஜராஜனும் சுத்தத்தமிழன் இல்லை. இல்லவே இல்லை. யார் யாருக்கெல்லாம் பயன்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தாலும் பார்ப்பனர்கள் மற்றும் மாற்று இனத்தவர்களைத் தவிர தமிழர்களுக்குச் சிறிதும் பயன்படவில்லை. இப்படி எதிலுமே தமிழனாக இல்லாத இராஜராஜன் தமிழ்த்தேசியமாயைக்காரர்கள் கண்களுக்கு மட்டும் எப்படி தமிழ்ப்பேரரசன் ஆனான்?

சர்வதேசியஇனத்தான் என்றும், தேசியஇனச்சார்பற்றவன் என்றும் அடையாளப் படுத்தப்பட வேண்டிய இராஜராஜனின் இரத்தப்பரிசோதனை அறிக்கையும் - எம் பாட்டன் இராஜராஜன் என வீரமுழக்கமிடும் பேரன்களாகிய நமது இரத்தப்பரிசோதனை அறிக்கையும் இதுதான். நான் சைவப்பிள்ளை, நான்

**எல்லாவற்றையும்விட மிகக் கொடுமையான வரலாறுகளும் மூவேந்தர்கள் காலத்தில் நடந்துள்ளன.தெலுங்கர், கன்னடர், மராட்டியர் வெற்றிக்காக தமிழ்ப்படையினர் சோழர்களால் பயன்படுத்தப்பட்டது போல சிங்களனின் வெற்றிக்காகவும்....**

முக்குலத்தான், நான் படையாச்சி, நான் கவுண்டன், நான் ராஜராஜசோழன் பரம்பரை, நாங்களெல்லாம் சுத்தத்தமிழர்கள். சக்கிலியர்களும், நாயக்கர்களும், ஒக்கலிகர்களும் சுத்தத்தமிழர்கள் இல்லை என்று யாராவது சொன்னால் ஒன்று அவருக்கு வரலாறும், அறிவியலும் சுத்தமாகத் தெரியாமல் இருக்கவேண்டும். அல்லது மனநலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட வேண்டியவராக இருக்கவேண்டும்.

மனுவின் முறையில் பிறப்பின் அடிப்படையில் சுத்த இரத்தப்பரிசோதனை செய்து பார்த்தால் இங்கு யாரும் தமிழன் இல்லை. திராவிடனும் இல்லை. பெரியாரின் ஆரியர் - திராவிடர் என்ற பிரிவினைகள் இரத்த அடிப்படையிலோ, பிறப்பின் அடிப்படையிலோ கடைபிடிக்கப்படுவதல்ல. பெரியாரே இதைத் தெளிவாக விளக்குகிறார்.

"இந்நாட்டில் வாழும் தற்காலப் பார்ப்பனர்கள் மத்திய ஆசியாவில் இருந்து குடியேறிய ஆரியர்களின் நேரான சுத்தமான சந்ததியர்கள் அல்ல என்பது உண்மையே ஆனாலும் அவர்களையும் திராவிடர்கள் என்று ஒப்புக் கொள்ளாமைக்குக் காரணம், அவர்களுக்கும் நமக்கும் உள்ள பல்வேறு பண்பு , கலை, ஆசாரம், நடப்பு ஆகிய பல வேறுபாடுகள் தாம். பழக்க வழக்கங்களைப் பார்த்துத்தான் அவர்களுக்கும் நமக்கும் இருந்து வரும் அடிப்படை பேதத்தைக் கருதித்தான் பிரிவினை செய்கிறோம். அவர்கள் எப்போதுமே திராவிடர்களை ஒதுக்கி வைத்துத்தான் வந்திருக்கிறார்கள். ஒதுக்கி வைத்திருக்கும்படியான கலாச்சாரத்தைத் தான் பின்பற்றி நடந்து வருகிறார்கள். அதாவது தாம் உயர்ந்தவர்கள் திராவிடர்கள் தாழ்ந்தவர்கள் இருவருமே தனித்தனிப் பிறப்பு என்கிற உணர்ச்சி அவர்களை விட்டு எப்போதும்நீங்கியதில்லை"

- பெரியார் - விடுதலை 6-10-1948

ஆரியன் - திராவிடன் என்பது கலந்து போய்விட்டது. பிரிக்க முடியாதது இரத்த பரிட்சையிலும் வேறுபடுத்த முடியாதது என்று சிலர் வாதாடலாம். அது நமது கருத்தை அறியாமல் பேசும் அறிவற்ற பேச்சு என்றே சொல்வேன். ஆரிய திராவிட இரத்தம் கலந்து விட்டிருக்கலாமே தவிர ஆரிய -திராவிட அனுஷ்டானங்கள் கலந்து விட்டனவா? சட்டைக்காரர் என்று கூட்டம் இருக்கிறது.இது வெள்ளை ஆரிய - கருப்பு திராவிட ரத்தக் கலப்பு என்பதில் எவருக்கும் ஆட்சேபனை கிடையாது என்றாலும் நமக்கும் அவர்களுக்கும் எதில் கலப்படம் இருக்கிறது.

இன்றைய தினம் ஆரிய - திராவிட என்ற பிரிவினை இரத்தப் பரீட்சையின் பேரிலல்ல. அல்லாமல், கலாச்சார, பழக்க, வழக்க அனுஷ்டானத்தின் படியாகும் என்பதை அனைவரும் உணர வேண்டும். அந்தப்படி பார்க்கிறபோது, யார் ஆரியர், யார் திராவிடர் என்றால், சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், தங்களைப் பிராமணர்கள் என்றும், அந்தப்படி பிராமணர்கள் என்பதால் உயர் ஜாதிக்காரர்கள் என்றும் சொல்லப்படுகிற பார்ப்பனர்கள் என்பவர்கள் ஆரியர்கள். அதுபோலவே அந்தப் பார்ப்பனர்களாலும், அவர்களின் கடவுள், மதம், சாஸ்திரம், புராண, இதிகாசங்கள் என்பவைகளின் பேரால் நாலாவது ஜாதி மக்கள், கீழ் ஜாதி மக்கள் என்று சொல்லப்படுகிற சூத்திர மக்கள் என்பவர்கள் திராவிடர்கள் ஆவார்கள். - (28.08.1953-இல் தருமபுரி மாவட்டம் பொம்மிடியில் தந்தை பெரியார் சொற்பொழிவு)

தமிழன் என்பதற்கு என்ன வரையறை? எந்த அடிப்படையில் தமிழனை அடையாளம் காண்பீர்கள்? மனுவைப் போல பிறப்பின் அடிப்படையிலா? பிறப்பின் அடிப்படையில் என்றால் படையெடுப்புகள் நடப்பதற்கு முந்தைய காலகட்டத்தில் வாழ்ந்தவர்களைத்தான் சுத்தத் தமிழர்கள் என்று ஓரளவுக்குச் சொல்லலாம். அது தமிழனோ, தெலுங்கனோ, பீகாரியோ, குஜராத்தியோ யாராக இருந்தாலும் சுத்தரத்தத் தத்துவம் பேசமுடியாது.

- தொடரும்

fssai 22414042000421

ஆர்கானிக் முறையில் அடர்ந்த மலைப்பகுதிகளிலும், அடிவாரங்களிலும் விளைவிக்கப்பட்ட பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் பழக்கூழ் மற்றும் பழச்சாறுகள். நெல்லி, மா, ஆரஞ்சு, திராட்சை, அன்னாசி




தேன் நெல்லி, ஜாம், பழக்கூழ், பழச்சாறுகள், மலைத்தேன்

Honey Amla, Mixed Fruit Jam, Fruit Squash, Fruit Juice, Pure Honey

SIRUMALAI
hygienic natural food products
FOODS

சிறுமலை ட்ரேடர்ஸ், 3 / 101 படுகைக்காட்டூர், அஞ்சுகுழிப்பட்டி, திண்டுக்கல்-624 308 sirumalaitraders@gmail.com

முன்பணம் செலுத்தி பொருட்களை விற்பனை செய்ய மாவட்டவாரியாக விற்பனையாளர்கள் தேவை.

வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com